**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

**தஞ்சாவூர்.**

**2022ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள்- திங்கட்கிழமை**

**( திருவள்ளுவராண்டு 2053 – சித்திரைத் திங்கள் 12 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண். 110/2018**

***Reg.No.0100/2018***

O.R.J. ஜாபர் பாட்சா .. **வாதி**

**/ எதிர் /**

(1). சுந்தரம்

(2) சுலோச்சனா **..பிரதிவாதிகள்**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **16.8.2018** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **21.8.2018** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு இன்று **(25.4.2022)** என் முன்பாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. **S.சத்தியமூர்த்தி** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. **செல்வராஜ்** அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கு வாதி நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக போடப்பட்ட நிலையில், வாதி அழைத்து ஆஜராகாததால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

**தீர்ப்புரை**

(1) வாதிக்கு, பிரதிவாதிகள் 23.11.2016 அன்று எழுதிக்கொடுத்த சமரசப்பத்திரப்படி அசல் தொகை ரூ.15,00,000/-மும், வழக்கு தாக்கல் செய்த பிறகு திரும்ப செலுத்தும்வரை 12% வட்டியும் சேர்த்து பிரதிவாதி, வாதிக்கு திரும்ப கொடுக்க வேண்டும் என்றும், வழக்கின் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) **செலவுத்தொகை குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது.** வாதி அழைத்து ஆஜராகவில்லை. வாதியின் தவறுகைக்காக வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு **ஏப்ரல் திங்கள் 25** ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**
**தஞ்சாவூர்.**

**தீர்ப்புரை**

**அசல் வழக்கு எண். 110/2018**

**நாள். 25.4.2022**